# 100வது ஜனன தினம்

J.M.J

# Birthday Rememberance

Thanks you for your prayers and kind presence
Holy mass at st.James church, Jaffna
On 11th march 2015 at 6.00 am



Benjamin Christudas
Abraham
(Baby)


Your Loving
Children



Mariamma
B.C.Abraham
(Rose malar)

திருமதி M.R.C. கொன்ஸ்ரன்ரைன்
( ஓய்வுநிலை ஆசிரியர் )
28/1, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞானகேசரி V.J.கொன்ஸ்ரன்ரைன் அவர்களின் மணிவிழா கையேட்டிலிருந்து...




பேரன்புடையீர்,

நிகழும் 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் என் மணிவிழா தினம் என்பதைத் தங்களுக்கு அறியத் தருவதில் அகம் மிக மகிழ்கின்றேன்.

ஆறு தசாப்தங்களாக ஆண்டவன் அருளிய அருங்கொடைகள் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளில் சமய, சமூக, இலக்கிய, கலை கலாசார, பொருளாதாரத் துறைகளில் நாடு தழுவிய ரீதியில், பல்பரிமாணங்களில் மிகவும் பயனுள்ள விதத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

பல்வேறு தொழில் நிறுவனங்களில் *Stationary, Pharmaceuticals, Agro chemicals, Hardware's, Industrial chemicals, Industrial / Marine engines & spares, Light engineering goods and Heavy engineering goods* போன்ற பல்வேறு பொருட்களை நாடு பூராவும் சந்தைப்படுத்த வாய்ப்புக் கிடைத்ததன் மூலமும், எனது கலைத்துறை சார்ந்த பணிகள் மூலமும், இலங்கையின் அனைத்து நகரங்களையும், மக்கள் வாழ்கின்ற அனைத்து கிராமங்களையும் சந்தித்திருக்கின்றேன். வாழ்வின் பெரும் பகுதியை மனிதர்களுடன் பகிர்ந்துள்ளேன்.

முதலாளிகள், தொழிலாளிகள், தொழிலதிபர்கள், மருத்துவர்கள், சிறு தொழில் செய்வோர், தொழிற்சாலைகள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், சந்தை முகவர்கள், அரசியல்வாதிகள், அமைச்சர்கள், மதவாதிகள், அரச அதிகாரிகள், ஊழியர்கள், கவ்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், நூலகங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதரகங்கள் மற்றும் பல்துறை சார்ந்த கலைஞர்கள் ஆகியோருடன் நெருக்கமாகப் பழகக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டதால் பல்வேறு தரப்பட்ட மனிதர்களின் வாழ்வியல்கள், மனப்பாங்குகள், ஆளுமைகள், பண்புகள், பலங்கள், பலவீனங்கள் பற்றி நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. சுவையான அனுபவமாயுமிருந்தது.

பலதரப்பட்ட மக்களுடன் சுமுகமான உறவை வைத்துக் கொள்வதற்கு எனக்குப் பெருந்துணை புரிந்தவர் *Prof. Dale Garnege* அவர்கள். என் இளவயதிலேயே இவர் எழுதிய *'How To Win Friends and Influence People'* என்ற புத்தகத்தைப் பலமுறை படித்து அதனைப் பிரயோகித்தும் வந்ததால் பல்வேறு தரப்பட்ட மனிதர்களுடன் பழகுவது, தொடர்புகளை ஏற்படுத்துவது, மேம்படுத்துவது, கருமங்களை வென்றெடுப்பது என்பது எனக்கு இயல்பாக அமைந்துவிட்டது. அவருக்கு என் நன்றிகள்.

நான் சந்தித்த ஒவ்வொரு மனிதரும் எனக்கு ஏதோ வழியில், வகையில் என் பணி சிறக்கப் பங்காற்றியுள்ளார்கள், ஊக்குவித்துள்ளார்கள், உற்சாகமளித்துள்ளார்கள். எனது பணிகளில் என்னை மேம்படுத்திய வர்களுமுண்டு, மேன்மைபடுத்தியவர்களுமுண்டு, ஏணியாய் என்னை உபயோகித்தவர்களுமுண்டு, உடனிருந்து என்னை இடறிவிட்ட ஒருசில கோழைகளுமுண்டு. அவர்கள் அனைவருமே என்னைப் புடம்போட்ட வர்கள்தான் என்பதில் மிக்க மகிழ்ச்சி.

இந்த வேளையில் இத்துணை காலமாக சிறப்பான பணிகள் பல ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய வல்லானை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன். என்னை வழங்கிய என் பாசமிகு தாய், தந்தையர்க்கு என் முதற்கண் நன்றிகள். ஆத்மார்த்தமாகத் துணைபுரிந்த என் குடும்பத்தினருக்கும், வழிகாட்டிய ஆசான்களுக்கும், தெளிவூட்டிய அறிஞர் பெருமக்களுக்கும், என்றும் என் வளர்ச்சியில் அக்கறைகொண்ட நல் இதயங்களுக்கும், பக்க பலமாய் என்றும் துணை நின்ற என் இனிய நண்பர் களுக்கும், என்னை ஊக்கு வித்த ஆர்வலருக்கும் மற்றும் யாவருக்கும் என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



என் பணி சிறக்க துணை புரிந்தவர்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரான தங்களை இந்த வேளையில் நினைவு கூருவதில் பெருமகிழ்வடைகின்றேன். தங்களுக்கு என் சிறப்பான நன்றிகள்.

தொடர்ந்தும் நல்ல பணிகள் புரிவதற்கு தங்கள் ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றேன்.



வாழ்க நலம்

கலைஞானகேசரி
*V.J.* கொன்ஸ்ரன்ரைன்
அகில இலங்கை சமாதான நீதிவான்

**கலைத்துறையில் நடித்த நாடகங்கள்**

- *1950 :* திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலப் பாடசாலை) ஆங்கில நாடகத்தில் பாடும் மாலுமி.
- *1954 :* புனித யாகப்பர் பாடசாலை மண்டபம் 'காசில்டா' நாடகத்தில் கதாநாயகி இளவரசி காசில்டா.
  கதை, வசனம், நெறியாள்கை - இ. டோறஸ் இராஜசிங்கம்
- *1960 :* ஒலிம்பிக் கழகம் வழங்கிய 'கண் திறந்தது' நாடகத்தில் டாக்டர் குமார்.
  கதை, வசனம் - வ. பிரகாசராசா, பாடல் - *V.J.* கொன்ஸ்ரன்ரைன், நெறியாள்கை - வ. பிரகாசராசா, *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.
  (பல போட்டிகளில் முதற் பரிசும், தங்கப் பதக்கமும் பெற்றுள்ளதோடு 25 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது.)
- *1967 :* யாழ். மாநகர மண்டபத்தில் சிம்லாஸ் கம்பைன்ஸ் வழங்கிய 'இடிந்த கோவில்' நாடகத்தில் கதாநாயகன்.
  கதை, வசனம், நெறியாள்கை, ஆடை, மேடை, ஒளியமைப்பு, பின்னணி இசை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.
- *1970 :* புனித யாகப்பர் ஆலய முன்றலில்,
- *1971 :* குருநகர் கலை அரங்கில் 'அரச கட்டளை' நாடகத்தில் ஏரோதன்.
  கதை, வசனம், நெறியாள்கை, ஆடை, மேடை, ஒலி, ஒளியமைப்பு - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❖ *1971* : யாழ் கோட்டை வெளியில் 300 அடி மேடையில் திருமறைக் கலா மன்றம் வழங்கிய 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' நாடகத்தில் ஆளுனன் பிலாத்து.

ஆடை அமைப்பு, உதவி நெறியாள்கை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன், நெறியாள்கை - நீ. மரிய சேவியர்.

❖ *1972* : குருநகர் கலை அரங்கில் செந்தமிழ் மன்றம் வழங்கிய 'வீரமாநகர்' இலக்கிய நாடகத்தில் - இராவணன்.
கதை, வசனம், நெறியாள்கை, ஆடை, மேடை, ஒலி, ஒளி அமைப்பு - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.

❖ *1972* : யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திருமறைக் கலாமன்றம் வழங்கிய ஒளிவிழா நாடகத்தில் ஏரோதன்.

❖ *1973* : தென் இந்திய நகரமான திருச்சியில் தேவர் ஹாலில் 'களங்கம்' நாடகத்தில் ஆளுனன் பிலாத்து.
ஆடை, ஒலி அமைப்பு - உதவி நெறியாள்கை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன், நெறியாள்கை - நீ. மரியசேவியர்.

❖ *1974* : அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டின் சிறப்பு நிகழ்வாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் செந்தமிழ் மன்றம் தயாரித்து வழங்கிய 'வீரமாநகர்' இலக்கிய நாடகத்தில் - இராவணன்.

❖ *1993* : இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் (தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக) திருமறைக் கலாமன்றம் வழங்கிய 'களங்கம்' நாடகத்தில் ஆளுனன் பிலாத்து.

❖ *1993* : யாழ். திருமறைக் கலாமன்ற மேடையில் 'களங்கம்' நாடகத்தில் ஆளுனன் பிலாத்து.

❖ *1994* : தமிழ் விழாவில் திருமறைக் கலாமன்றம் வழங்கிய 'கும்பகர்ணன்' இலக்கிய நாடகத்தில் இராவணன்.
கதை, வசனம், நெறியாள்கை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.

❖ *1994* : அகில இலங்கை கம்பன் கழகம் நல்லூரில் நடத்திய கம்பன் விழாவில் 'கும்பகர்ணன்' இலக்கிய நாடகத்தில் இராவணன்.

❖ *1995* : சென் பிறிஜற் கொன்வன்ற், டவர் மண்டபம், யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கம் ஆகியவற்றில் திருமறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாமன்றம் வழங்கிய 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' நாடகத்தில் ஆளுநனன் பிலாத்து.

**பணிபுரிந்த பல்வேறு அமைப்புக்கள்**

**சமயப்பணி :**

திருப்பாலத்துவ சபை (தலைவர் / செயலாளர்)
புனித வின்சென் டி போல் சபை
திரு இருதய சபை
புனித யாகப்பர் பங்குச்சபை
மேய்ப்புப்பணி மாநாடு 1994 (இணைப்பாளர், கலாசாரப் பிரிவு)

**சமூகப் பணி :**

குருநகர் கலைக்கழகம் (தலைவர்)
குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி (18 கழகங்களின் இணைப்பு - தலைவர்)

**கலைப்பணி :**

திருப்பாலத்துவ சபை
ஒலிம்பிக் கழகம்
சிம்லாஸ் கம்பைன்ஸ்
செந்தமிழ் மன்றம்
திருமறைக் கலாமன்றம் (பொதுச் செயலாளர் 1971 - 1998)
நெயோ கல்சரல் கவுன்சில் (இயக்குநர்)
யாழ். பிரதேச கலாசாரப் பேரவை (கலை மேம்பாட்டுச் செயலர்)

**பொருளாதாரப் பணி :**

Colombo Agencies
Ltd (Branch Manager / Product Manager)
Nasio Chemicals
Marketing Manager
Harrisons Lister
Engineering (Cbo) Ltd
Commercial Officer
Nutech Engineering :
Director
Charley Coni :
Marketing Director





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Vijay & Co : Managing Director

## நெறியாள்கை செய்த நாடகங்கள்

*1957* சர்வாதிகாரி
*1960* தேன் விருந்து
*1962* கண்கள் எங்கே?, கலைக் கோவில்
*1967* இடிந்த கோவில்
*1971* அரச கட்டளை
*1972* வீரமாநகர்
*1993* வளையாபதி
*1994* கும்பகர்ணன்
*1997* கூத்துப் பண் நடம் (நாட்டிய நாடகம்)
*1998* OTHELLO (சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகம்)
*1998* HAMLET (சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகம்)
*2001* KING LEAR (சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகம்)

இவைதவிர பல கலை மன்றங்களின் நாடகங்களை இயக்கியதுடன் பல நாடகங்களின் நெறியாள்கையை மேற்பார்வை செய்துமுள்ளேன்.

## வீடியோ திரைப்படங்கள் :

திருமறைக் கலாமன்றத்தின் 'பலிக்களம்'.
உதவி நெறியாள்கை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் 'யூதகுமாரன்'.
நெறியாள்கை - *V.J.* கொன்ஸ்ரன்ரைன்.

## எழுதிய நாடகங்கள் :

சர்வாதிகாரி
தேன் விருந்து
கண்கள் எங்கே?
கலைக் கோவில்
இடிந்த கோவில்
அரச கட்டளை
வீரமாநகர்
உதிர்ந்த மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரங்கம்
கும்பகர்ணன்
சேகரின் அதிஷ்டம் (இசையும் கதையும் - இலங்கை வானொலி *1960)*

இதுவரை ஐநூறுக்கும் மேற்பட்ட ஆற்றுகைகளில் சம்பந்தப்பட்டுள்ளேன். எழுத்துரு, நடிப்பு, அரங்க அமைப்பு, ஒலி - ஒளி வடிவமைப்பும் இயக்கமும், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, அரங்க நிர்வாகம், முகாமைத்துவம், நெறியாள்கை ஆகிய துறைகளிலும் பங்களித்துள்ளதோடு காலாகாலமாகத் தொழில் ரீதியாகப் பேணப்பட்டு வந்த ஒப்பனை, ஆடை அமைப்பு, அரங்க அமைப்பு போன்ற தொழில் நுணுக்கங்களை இளைய தலைமுறையினருக்குக் கற்றுக்கொடுத்து பலரை உருவாக்கம் செய்துள்ளேன். இதன் மூலம் இன்று பலர் சில நிறுவனங்கள் உட்பட பயனடைகின்றனர். 30 இற்கும் மேற்பட்ட பல்வேறு கலைமன்றங்களில் நாடகப் படைப்புகளை மேற்பார்வை செய்ததுடன் பல நாடகங்களை நெறியாள்கையும் செய்துள்ளேன். திருமறைக் கலாமன்றத்தின் பிரமாண்டமான வெற்றிப் படைப்புகள் அனைத்திலும் நாடகத் தயாரிப்பு சம்பந்தமான சகல அம்சங்களிலும் எனது பாரிய பங்களிப்பு இருந்துள்ளது. மன்றத்தின் 34 கலைப்பிரிவுகளின் ஒருங்கிணைப்பாளராக (கவின்கலைகள் பயிலகம் உட்பட) நிர்வகித்த அனுபவம் இனிமையானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கணவரின் சேவைக்கால பணிகளில் அறிந்தவை

திருமதி இராஜேஸ்வரி கொன்ஸ்ரன்ரைன்

மணிவிழா *(13.03.2002)* கையேட்டில் அவரால் குறிப்பிட்டுள்ளமைபோல,

Colombo Agencies Ltd (Branch Manager / Product Manager)
Nasio Chemicals Marketing Manager
Harrisons Lister Engineering (Cbo) Ltd Commercial Officer
Nutech Engineering : Director
Charley Coni : Marketing Director
Vijay & Co : Managing Director

போன்ற பணிகளை செவ்வனே செய்திருந்தார்.

திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளராகவும் மற்றும் பிரதி இயக்குநர், வழிநடத்துனர், முகாமையாளர், அமைப்பாளர், இணைப்பாளர், நாடக முகாமையாளர், தட்டெழுத்தாளர், கலைஞர், நாடக இயக்குனர், நாடகத் தயாரிப்பாளர், ஒலி - ஒளி இயக்குநர், ஒப்பனைக் கலைஞர், வரையிலாளர், மேடை அமைப்பாளர், நெறிப்படுத்துனர், திட்டமிடுபவர், விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். மன்றத்தின் இயக்குநர் வெளிநாடு சென்ற வேளைகளில் இயக்குநராகவும் கடமையாற்றியுள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் இன்றைய நிலைக்கு அடித்தளமிட்டு ஆணிவேராக, அத்திவாரமாக அமைத்துத் தந்தது மட்டுமன்றி, மன்ற அங்கத்தவர்களின் எதிர் காலத்திற்காக அநுபவம் மிக்க, ஆற்றல் மிக்க, இளம் துடிப்புள்ள இளையோரை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும்.



ஒரு வைத்தியராகி மாண்புடன் சேவையாற்ற விரும்பிய இவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் மறைவினால் தன் குடும்பத்துக்கு உதவவேண்டுமென்ற நல்லெண்ணத்தில், தனது இருபதாம் வயதில் தனியார் நிறுவனத்தில் முகாமையாளராக நியமனம் பெற்று உதவி செய்தார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வாசிப்பு, பேச்சுத் திறனுடையவராக விளங்கினார்.

இவரது மும்மொழித் திறமை திருமறைக் கலாமன்ற வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக விளங்கியதால் நாடு முழுவதும் மன்றம் பல கிளைகளை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். தமது திறமை களை மன்ற அங்கத்தவர்கள் கற்கவேண்டுமென்பதால் எல்லோருடனும் உரையாடுவதில் மகிழ்ச்சி கண்டார். மனைவி, பிள்ளைகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால் ஏனைய மன்ற அங்கத்தவர்களும் தமது குடும்பத்தினருடன் இணையத் தொடங்கினர். 'நல்லதொரு குடும்பம் நாட்டுக்குத் தேவை' என்பதை வெளிப்படுத்த பலரின் உதவிகளையும் பெற்று, அழகிய மணி மண்டபம் உருவாக உறுதுணையாகச் செயற்பட்டார்.

*1992* இல் தேசிய கத்தோலிக்க வழிபாட்டு கலாசார ஆணைக்குழு அங்கத்தவராக செயற்பட்ட இவர், *1998* இன் புதிய நிர்வாகம் அமைக்க வழிவிட்டு, தனது இல்லத்தில் 'நேயோ கல்சரல் கவுன்சில்' இனை உருவாக்கி, இயக்குநராகத் தனித்துச் செயலாற்றி, மக்களின் முன்னேற் றத்துக்காக பல சேவைகளைச் செய்தார். செயல்முறைக் கணிப்பொறி என்ற நூலை வெளியிடுவதில் ஆரம்பித்து பல நூல்களை வெளியீடு செய்துள்ளார். நாட்டில் அசாதாரண சூழலில் நிலவிய காலத்தில் மக்களின் தேவையறிந்து பல உதவிகளை கடிதங்கள் மூலம் நிறைவுசெய்துள்ளார்.

நாடக, இசை நிகழ்ச்சிகளுக்கு ஒலி, ஒளி அமைப்பாளராகவும், விசேடமாக இலங்கையிலுள்ள பிரபல்யமான நாடக அரங்குகளில் பல்வேறு ஆற்றுகைகளுக்கு ஒளி அமைப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

அவையாவன:

யாழ்ப்பாணம்

முன்னாள் மாநகர சபை மண்டபம்.

யாழ். வீரசிங்கம் மண்டபம்.

திருமறைக் கலா மன்ற திறந்தவெளி அரங்கு.

சென் ஜோண்ஸ் கல்லூரி அரங்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்

யாழ். இந்துக் கல்லூரி மண்டபம்

குருநகர் கலை அரங்கு

சுண்டிக்குளி மகளிர் பாடசாலை அரங்கு

சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை அரங்கு

கைலாசபதி அரங்கு, யாழ் பல்கலைக்கழகம்

**கிளிநொச்சி**

புனித திரேசா ஆலய திறந்தவெளி அரங்கு.

**வவுனியா**

பாடசாலை அரங்கு.

**திருகோணமலை**


புனித ஜோசப் கல்லூரி அரங்கு.
புனித ஜோசப் கல்லூரி திறந்தவெளி அரங்கு.

**ஹற்றன்**

பாடசாலை அரங்கு.

**கொழும்பு**

எல்பின்ஸ்டன் மண்டபம் - மருதானை.
டவர் மண்டபம் - மருதானை.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென் பிறிஜற் கொன்வன்ற்-கொழும்பு 07.

ஸ்ரீ கதிரேசன் மண்டபம் -வெள்ளவத்தை.

இராமகிருஷ்ண மண்டபம் -வெள்ளவத்தை.

லயனல் வென்ற் தியேட்டர்




**மகரகம**

இளைஞர் அரங்கு (அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடியது)

நேயோ கல்சரல் கவுன்சில் மூலம் வெளியீடு செய்யப்பட்ட நூல்கள் :

1. செயல்முறைக் கணிப்பொறி
2. கணிப்பொறி 2000 (இரண்டு பதிப்புகள்)
3. ஆசிரியத்துள் நான்
4. களம் தந்த களங்கம்
5. குருநகர் கலைமாட்சி
6. *Who are the Kurukulams of Jaffna (English,* தமிழ்)
7. கடலலைகள் கொஞ்சும் நகர்
8. சவுலன் சின்னப்பர்
9. காதல் நெஞ்சம்
10. குருதிக் களியல்
11. ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்
12. ஆகுதி
13. ஆசிரியத்துள் நான் - நான்கு தசாப்தங்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற விருதுகள்
கலைஞானகேசரி
கலாபூஷணம்
ஆளுநர் விருது


කලාභූෂණ රාජ්‍ය සම්මාන ප්‍රණාමෝපහාර



திரு வி. ஜெ. கொன்ஸ்ரன்ரைன்
பிறந்த திகதி:13.03.1942
வயது:65
விலாசம்:28/1 சென்ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணம்.

இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலைத்துறை விசேடமாகக் நாடகத்துறை, பிரதியாக்கம், அரசாங்க நிர்வாகம், நடிப்பு மேடை அமைப்பு, ஒலி, ஒளி அமைப்பு, ஒப்பனை, பொது நிர்வாகம், நாடகத் தயாரிப்பு நெறியாள்கை ஆகிய அனைத்து அரங்கு சார் துறைகளிலும் கடந்த 50 ஆண்டுகளாக ஈடுபாடு கொண்டுள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பென் ஏபிரகாம்

என்றும் எம் நினைவை விட்டு நீங்காத
என் அன்புத் தெய்வத்திற்கு மனைவி மக்களாகிய யாம்
எம் கரங்கள் கூப்பி வணக்கத்தையும்
எம் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

பால உடையாரின் வாரிசான ஏபிரகாம்பிள்ளை நோசம்மாவிற்கும்
பாசக் கடைசிமகனாக உதித்து பண்புடன் கல்விகள்
பல பெற்றுக் கண்ணியமாக வளர்ந்து அரச பணியில் சேர்ந்து,
பருவம் வந்ததும் வஸ்த்தியாம்பிள்ளை எலிசபெத்தம்மாவின்
பாச மகள் மரியம்மாவை மணந்து மக்கள் ஏழ்வரைப் பெற்று
பாசமுடன் வளர்த்து பேரப்பிள்ளைகள் பதின்மரைக் கண்டு மகிழ்ந்து
பல சேவைகள் ஊருக்குச் செய்து பலரும்
பலவாறு போற்ற பெருமையாக வாழ்ந்தீர் — இன்று
உன் பெருமை பேச வார்த்தைகள் இல்லையய்யா
உனை நினைந்து நாம் கலங்குவதைக் கேளய்யா.

மனைவி புலம்பல்.

என்னைச் சுமங்கலியாக வழியனுப்புவாய் என எண்ணியிருந்த வேளையில்
எம் இனிய இல்லற வாழ்க்கை நாற்பத்தேழு வருடங்கள் வாழ்ந்தது போதும் என்று
என்னைக் கைப்பிடித்த நாளன்று இயலாத என்னை தள்ளாத வயதில்
எப்படியய்யா தனிமையில் விட்டுச் செல்ல மனம் வந்ததைய்யா

மக்கள் புலம்பல்

ஆசையோடு உனக்கு அன்னம் ஊட்டிய கைகளின் மணம் காயுமுன்
அக்கையாலே ஒருபிடி மண் போடச் செய்து விட்டாயய்யா !
மனம்குளிர உன்னை கவனிக்க வேண்டும் என்ற ஆசையை
மனநிறைவோடு செய்யுமுன் போய்விட்டாயேயய்யா !
உன் திருமுகத்தைக்காண ஓடோடி வந்தும் கடைசியாக
உன் முகம் பார்த்து 'டடி' எனக் கதறி அழ முடியாது போய்விட்டதேயய்யா !
எட்ட இருந்ததால் ஒரு பிடி மண்போட்டு
என் கடமை செய்ய முடியவில்லை யேயய்யா !
உன் புகழ் அறிய எம் மக்கள் வளர முன்
உனைக் காலன் அழைத்து விட்டானேயய்யா !
உன் எழுபத்தைந்து வயதில் துள்ளிப்பாய்ந்து வளையில் தொக்கிய
உன் வீரத்தை மறக்க முடியவில்லையய்யா !
புகழோடு நீ வாழ்ந்தது போல் நாமும் தன் நம்பிக்கையோடு
புகழோடு பிறர் போற்ற வாழ வரம் தாய்யா !

உன்னை இறைவன் பரகதியில் சேர்க்கவும்
உன் ஆத்மா சாந்தியடையவும் வேண்டுகிறோம்

உன் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்

**27.01.1994**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி M.B.C. எபிரகாம் (றோஸ்மலர்)

## 11.03.1925 - 18.01.2017

இதயம் என்னும் கோவிலில்
தெய்வம்போல் நினைவினில்
நெஞ்சம் திறந்து மனவேதனையில்
சிரம் தாழ்த்தி, கரம்கூப்பி
யாம் தரும் கண்ணீர் அஞ்சலி.

பஸ்தியாம்பிள்ளை - எலிசபேத் அவர்களின் பாசமிகு மலராய் றோஸ்மலர் என்று அழைக்கப்பட்ட மரியம்மா, ஏபிரகாம் - றோசம்மா அவர்களின் இளைய வாரிசு பெஞ்சமின் கிறிஸ்துதாஸ் (புகையிரத நிலைய அதிபர்) அவர்களைக் கரம் பிடித்து மக்கள் ஏழ்வரை பெற்ற தாயே! பேரப்பிள்ளைகள் பதினெண்மரை நினைத்தோ திகதி 18 இல் காலமானீர்.

உமது பூட்டப் பிள்ளைகள் ஏழு பேரும் உம்மைக் கண்டு ஆனந்தமடையும் முன்னே பரகதி அடைந்தீரே! அவர்கள் பெயர்களை மனதில் வைத்து அவர்களுக்காக மன்றாடுவீரே! மக்களைவிட மருமக்களை நேசித்த தாயே! ஞானாவுக்கு கடவுள் தந்த செல்வம் என்று சொன்னீரே.

பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்றும், கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றும் அடிக்கடி கூறுவீரே!

*M.R.C.*கொன்ஸ்ரன்ரைன், *J.P.L.*மரியதாஸ், *E.* பெனடிக்ற் ஆகிய மூன்று ஆசிரியர்களும் ஓய்வு பெறும் மட்டும் காத்திருந்தீரே!

ரவியும், சூரியனும் உமது பக்கத்தில் நின்றதால் நிம்மதியாய் நித்திரையானீரோ!

டாக்டர்கள் மூவர் உமது உயிரைக் காக்க முயன்றும் நீர் மௌனியானீரே!

மௌனத்தில் மகிழ்ச்சியாய் இருக்கலாம் என்று கூறி இறைவனடி சேர்ந்தீரே!

07 நாட்கள், 10 மாதங்கள், 91 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த காலம் போதும் என்று ஆண்டவர் உம்மை அழைத்தாரோ?

**உறவுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**08.11.2013**

## மரண அறிவித்தல்கள்



கலாபூஷணம்

**V.J.கொன்ஸ்ரன்ரைன்**

(குருநகர் துரை - அகில இலங்கை சமாதான நீதிவான்)

28/1, சென்ஜேம்ஸ் வேதக் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் V.J.கொன்ஸ்ரன்ரைன் நேற்று (08.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - கிறிஸ்ரின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பென் ஸ்பிரகாசம் மற்றும் மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மடுரோஜேஸ்வரி குரோசட்டிஸ்டாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், கிறிஸ்ரியன் மகேந்திரன் (மகேன் - Hayleys Power Engineering), விஜயசந்திரன் (விஜய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், V.J.மரியதாசன் (தாசன்), V.D.பஸ்ரர் (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பூங்குன்றமின் (மரின்) மாமனாரும், அரோன், ஏனோக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (09.11.2013) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பி.ப.3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/1, சென்ஜேம்ஸ் வேதக் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P.0212223224.

### அமரர் V.J கொன்ஸ்ரன்ரைன்

காலையில் பூபாளம் கேட்கும் என்றிருக்க
கேட்டதுவோ இறைபாரிக்கும் மணியின் ஓசை
கோகுலங்களின் இன்னிசைக்கு மாற்றாக
கூக்குரலோடு கூடிய அழுகுரல்களின் ஓசை

அழகுடன் கூடிய செந்தமிழின் காவலனாய்
உலகாய ஆங்கிலத்தின் புலமை மிக்கோனாய்
இணைமொழியாம் சிங்களத்தின் இணைப்பாளனாய்
'கலாபூஷணம்' விருதுபெற்று வாழ்ந்திருந்தாய்

சீரிய பேச்சாளராய் சிறந்த நாடக ஆசிரியனாய்
திறன்மிகு ஒப்பனையாளனாய் போற்றத்தகு இயக்குநராய்
கலை வளர்க்கும் திருமறைக் கலாமன்றத்தின்
மூத்த உறுப்பினராய் பணிபுரிந்து நின்றாய்

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் தலைவனாய்
நெயோ கல்சுரல் கவுன்சிலின் இயக்குநராய்
குருநகர் மக்களின் செழிப்புறு வாழ்வுக்காய்
குருநகர் துரை என்ற பெயரில் உழைத்திட்ட *V.J.C.*யே

பாதையைக் காட்டி பார்வையில் தூர நோக்கிட்டு
குருநகரின் கலை எழுச்சிக்கும் சமூக சேவைக்குமாய்
வாழ்வாய் எம்மோடு பல காலம் என்றிருந்தோம்
வாழ்ந்தது போதுமென்றோ பயணத்தை சுருக்கிவிட்டாய்

துயருறும்
*C.M.* நெல்சன் *J.P.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதகலா நினைவலைகள்

**வெலிச்சோர் யூலியஸ் கொன்ஸ்ரன்ரைன்**
**[அகில இலங்கை சமாதான நீதவான்]**
**அவர்களின் பிறந்த நாள் நினைவாக [13.03.2014]**
**வெளியிடப்பட்ட பிரசுரம்**

தனது வாழ்நாளை முற்றுமுழுதாக சமூகநலப் பணிகளிலும் கலை, கலாசார, ஆன்மீக, அறிவியல், தொழில்நுட்பப் பணிகளிலும் அர்ப்பணித்து வாழ்ந்தவர் இவர். இவை தொடர்பாக நாடு தழுவிய ரீதியில் பல்பரிமாணங்களில் மிகப் பயனுள்ள விதத்தில் தொடர்புகளை மேற்கொண்டு பணியாற்றியவர். இவ்வாறான பணிகள் அனுபவங்களினூடாக குருநகர் மண்ணில் கல்வி, கலை, கலாசார, தொழில், பக்தி முயற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்தி இளைஞர்களை ஒன்றுதிரட்டி மன்றங்கள் அமைத்துச் செயற்பட்டவர். இவர் இளைஞர் கலைக்கழகம் ஊடாக ஊருக்கு ஆற்றிய பணிகள் என்றும் மறக்கப்பட முடியாதவை.

இருபத்தெட்டு ஆண்டுகள் திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளராக இருந்து அதன் வளர்ச்சியிலும் கவின் கலைகள் பயிலகம், சைவ சித்தார்ந்த ஆய்வுகூடம் போன்றவற்றில் ஆற்றிய முதன்மையான பங்கு போற்றுதற்குரியது, மறுக்கப்பட முடியாதது. குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி இன்றுவரை பலமாக இயங்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர் இவர். *Catholic National Commission for Liturgy and Culture (Colombo)* என்னும் அமைப்பில் கலாசார பிரதிநிதியாக நான்கு ஆண்டுகள் பணியாற்றி புகழடைந்தவர். இறுதிவரை *Neo Culture Council* இயக்குநராக இருந்து பல நூல்களை வெளியீடு செய்தவர்.

யாழ் பிரதேச கலாசார பேரவையின் உறுப்பினராக, செயலாளராக, உப தலைவராக ஆற்றிய பணிகள் மகத்தானவை. இக்காலகட்டத்திலேயே 'கலைஞானகேசரி' விருதும், 'அகில இலங்கை சமாதான நீதவான்' பட்டமும் வழங்கப்பட்டன.

கலையுலகில் இவரது பங்கு எல்லையற்றது. நாடகத்துறையின் அனைத்து நுணுக்கங்களையும் இவரூடாகப் பலர் கற்றுக்கொண்டதுண்டு. இவரது பணிவாழ்வின் ஒட்டுமொத்த பெறுமதியாக கலாபூஷண விருது, ஆளுநர் விருது *(2013)* போன்றவைகளைப் பெற்றுயர்ந்தவர்.

இவற்றுக்கு மேலாக தனது குடும்பத்தை உயிரினும் மேலாகக் கருதி, அதை அன்பிலும் பக்தியிலும் சமூக உறவிலும் வளர்த்து பெருமை சேர்த்தவர். நல்லாசிரியையான தனது மனைவிக்கு அவரது தூய பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைத்து, பெருமை சேர்த்து அவற்றின் சிறப்புகளை உள்ளடக்கி 'ஆசிரியத்துள் நான்' என்னும் நூலை இருமுறை வெளியிட்டு ஆசிரிய உலகிற்கு பெருமை சேர்த்தவர். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட அமரர் *V.J.* கொன்ஸ்ரன்ரைனட அவர்கள் ஆண்டவனின் நிழலில் இளைப்பாறி, பேரின்ப பேற்றினில் நிலைத்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நெஞ்சகலா நினைவுகளுடன்

திருமதி **M.R.S.** கொன்ஸ்ரன்ரைன்,
கிறிஸ்ரியன் மகேந்திரன் குடும்பம்,
விஜயசந்திரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිහින් ඉවත්නොවන සිතුවිලි රැළි.



වෙලිච්වෝර් යූලියස් කොණ්ස්ටන්ටෛන්.

සමස්ත ලංකා සාම විනිසුරු.

උපන් දින සමරුම්. (13.03.1942).

තමාගේ සම්පූර්ණ ජීවිතයම සමාජ සේවයට හා කලාත්මක, සංස්කෘතික, අධ්‍යාත්මක, හා විද්‍යාත්මක සේවාවලට කැපවුණු කෙනෙක්. මේවා සම්බන්දව ව්‍යාප්ත ලෙස, බහුමානලෙස හා කාර්යක්ෂමව රටපුරා සමඳතා ඇතිකරගෙන සේවයකළ කෙනෙක්. මෙම සේවාවන් හා ඇන්දකීම මගින්, කුරුණගර් මව් බිමේ අධ්‍යාපන, කලා, සංස්කෘතික, වෘත්තීය හා භක්ති ක්‍රියාවන් වල නියුක්තව තරුණයින් එකතුකර, සමාජවල් පිහිටුවා ක්‍රියාකළ කෙනෙක්. මොහු තරුණ කලා සමාජය මගින්, ගමට කළ සේවාවන් අදත් අමතක නොවන ඒවායයි.

අවුරුදු 28 ක් රංග බලා කේන්ද්‍රයේ මහ ලේකම් ලෙස කටයුතු කරලා, කෙන්ද්‍රයේ වැඩි දියුණුව සඳහාත් හින්දු ධර්මය පර්යේෂණ මණ්ඩලයේ හා සෞන්දර්ය කලා පුහුණුවීමෙ මධ්‍යස්ථානයෙ, මෙතුමා ඉටුකළ වැදගත් සේවය, ඉතා ප්‍රශංසනීයයි. අමතක නොවන්න ඒවාය.

කුරුණගර් එක්සත් පෙරමුණ, අදවනතුරු ශක්තිමත්ව ක්‍රියාකරනවානම් ,එයට මුල් හේතුවුණේ මෙතුමාය. Catholic National commission for Liturgy and Culture (Colombo) යන සංවිධානයේ සංස්කෘතික නියෝජිතයෙක් ලෙස, අවුරුදු හතරක් කැළ සේවය නිසා කතිම ගෞරවය හිමිවුණා. අවසානයවෙනකං, Neo Cultural Council හි අධ්‍යක්ෂක ලෙෂ කටයුතු කර, පොත් කීපයක් ප්‍රකාශයට පත්කළේය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යාපනය ප්‍රාදේශයේ සංස්කෘතික මණ්ඩලයේ, සාමාජිකයෙක්, ලේකම් හා උප සභාපති හැටියට ඉටු කළ සේවය, ඉතා විශිෂ්ටයි. මේ කාල පරිච්ඡේදයෙහි, ඔහුට, "කලාසදාන කේසරි" සම්මානය හා සමස්ත ලංකා සාම විනිසුරු පදවි ද හිමිවුණා.

කලා ලෝකයේ, මෙතුමාගේ දායකත්වයට සීමාව නොතිබුණි. නාට්‍ය කලාවේ නිපුණතාව, මෙතුමා මගින්, කිපදෙනක්ම හදාරුවෝය. ඒ තුමාගේ සේවා ජිවිතයේ, සමස්ත අගය සේ ඔහුට "කලාභූෂණ සම්මානය" හා "ආන්ඩුකාරයාගේ සම්මානය" (2013) ද පිදුම් ලැබි, සම්භාවනීය තත්වයකට පත්වුණා.

මෙ සියලුමට ඉහලින්, ඔහුගේ පවුල ගැන පනට වඩා ආදරින් කටයුතු කළ ඔහු, තමාගේ පවුලේ අය, ආදරෙන්, ශුද්ධාවෙන් හා සමාජ සම්බන්ධතාව සමගින් ද දියුණුකර, එකාලෝක කළේය. යහපත් ගුරුතුමයක්වන, එතුමාගේ බිරින්දගේ, පූජ්‍ය සේවයට සහයෝගය දැක්වමින්, ඒම වෘත්තිය අභිමානවත්බව අතුල්කරමින්, " ගුරු වෘත්තියතුළ මා " යන ග්‍රන්ථය, දෙවරක්ම ප්‍රකාශයට පත්කර, ගුරුවෘත්තියට උත්කෘෂ්ට සේවාවක් ඉටුකළ කෙනෙක්ය. මෙම උත්තරීතර ගුණාංගවලින් හෙබි, දිවංගත V.J.කොණ්ස්ටන්ටෛයින් මැතිතුමා නිවන් සැප ලැබේවයි යාවඥා කරමු.

හදවතින් ඉවත් නොවන ස්මෘතීන් සමගින්

28/1 ගාන්ද ජේමස් බැටහිර විදිය,

යාපනය.

13.03.2014.

M.R.C. කොණ්ස්ටන්ටෛයින් මහත්මය,

තිරිස්ටියන් මහේන්දිරන්ගේ පවුලේ අය,


විජයචන්දිරන්.


දූරකථනය : 021 222 3224.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org